**முதன்மை மாவட்ட நீதிமன்றம், இராமநாதபுரம்.**
**சாட்சிகளின் வாக்குமூலம்**
**(அத்தியாயம் XXIII குற்றவியல் விசாரணை முறை சட்டம்)**

**அமர்வு வழக்கு எண். : 104/2022**
**நாள்: 25.11.2025**
**அரசு தரப்பு சாட்சி** : 22 (LW37)

2025ம் ஆண்டு நவம்பர் திங்கள் 25ம் நாள் சாட்சியின் வாக்குமூலம் 1873ம் வருடத்திய சட்டம் பிரிவு 10ன்படி சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | மகாலிங்கம் | ஜாதி | |
| தந்தை பெயர் | | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுகா | | வயது | |

(A1, A3, A4, A6, A7 ஆஜர். A2, A5 ஆஜர் இல்லை. கு.வி.மு.ச.பிரிவு 317ன் படி மனுத்தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டுள்ளது. )

<u>முதன்மை விசாரணை:</u>

நான் தற்போது அபிராமம் காவல் நிலையத்தில் தலைமைக்காவலராக போலிஸ் Data Entry Operator ஆக பணிபுரிந்து வருகிறேன். கமுதி காவல் நிலையத்தில் போலிஸ் Data entry operator ஆக 2021ம் ஆண்டு பணிபுரிந்த போது, கமுதி காவல் வட்ட ஆய்வாளர் அவர்களின் உத்தரவுப்படி மண்டலமாணிக்கம் காவல் நிலைய குற்ற எண். 139/2021, பிரிவுகள் 147, 148, 341, 427, 323, 324, 302 IPC வழக்கின் கணினியில் பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள் அனைத்தையும், வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான கமுதி காவல் வட்ட



MEHBUB ALI KHAN A K Digitally signed by MEHBUB ALI KHAN A K Date: 2025.11.25 17:42:23 +0530

ஆய்வாளர் அவர்கள் சொல்ல சொல்ல கணினியில் பதிவு செய்து கொடுத்தேன். இது சம்மந்தமாக கமுதி காவல் வட்ட ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

ஆவண விவரங்கள் குறித்து எனக்கு நேரடியாக தெரியாது. ஆய்வாளர் சொன்னதை நான் தட்டச்சு செய்து கொடுத்தேன். நான் Data entry operator ஆக பணி செய்ததற்கான அடையாள அட்டை நகலை ஆய்வாளர் பெற்று நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

நான் சொன்ன நேரத்தில் சொன்ன தேதியில் சொன்ன பணியில் இல்லை என்றால் சரியல்ல.

மறு விசாரணை – இல்லை.

MEHBUB ALI KHAN A K

Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2025.11.25 17:42:26 +0530

முதன்மை அமர்வு நீதிபதி ,

இராமநாதபுரம் .